ஆண்டுகளுக்கு ஒருமுறை திருக்கோயில் குடமுழுக்கு மாண்புமிகு அம்மாவின் அரசால் நடத்தப்பட்டு வருகிறது. தமிழகத்திலுள்ள பெரும்பாலான திருக்கோயில்கள் தொன்மை வாய்ந்தவையாகும். திருக்கோயில்களின் பழமை மாறாமல் திருப்பணிகள் நடத்துவதற்கு, உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்பேரில் வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டு, குழுவின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் மட்டுமே திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் நடத்தப்பட வேண்டும். உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் பேரில் உயர் மட்டக் குழுவின் வல்லுநர்களை வரவழைத்து கூட்டம் நடத்தி, ஒப்புதல் பெறுவதில் சில நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதால், சிறிது காலதாமதம் ஏற்படுகிறது. இருப்பினும், தற்போது இந்த உயர்மட்ட வல்லுநர் குழு மாதம் இரண்டு முறை கூட்டப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கட்டளையிட்டதன் அடிப்படையில், விரைவாக அனைத்துத் திருக்கோயில்களுக்கும் கும்பாபிஷேகம் நடத்துவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

10—

செயற்கை இழை ஓடுதளம்

***37522—திரு. ரா. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரக ரோலர் ஸ்கேட்டிங் வளையத்தில் செயற்கை இழை ஓடுதளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மாவின் கனவை நனவாக்க விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில்

2019 ஜனவரி 4]

3 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்து, விளையாட்டு வீரர்களின் வாழ்க்கையில் விளக்கேற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அவர்களது தொகுதிக்குட்பட்ட பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் அமைந்துள்ள ரோலர் ஸ்கேட்டிங் மைதானத்தில் செயற்கை இழை ஸ்கேட்டிங் தளம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். பெரம்பலூர் மாவட்டத்தில், பெரம்பலூர் மாவட்ட விளையாட்டு மைதானம் அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் அமைந்துள்ள ரோலர் ஸ்கேட்டிங் மைதானத்தில் செயற்கை இழை ஸ்கேட்டிங் ரிங் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், மேற்படி இடத்தை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் ஒப்படைக்கும்பட்சத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. ரா. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னக் கரும்பெடுத்து, செவ்வந்தி பூ தொடுத்து, வண்ணப் பட்டாடை வகையுடனே தான் சூடி, எண்ணக் குவியலுக்கு, பொங்கிவரும் பொங்கலுக்கு, தமிழர்களின் வாழ்வில் உவகை சுரக்க, பச்சரிசி, புது வெல்லம், செங்கரும்பு இவற்றோடு தமிழர்களின் திருநாளாம் பொங்கலுக்கு 1,000 ரூபாய் ரொக்கத்தையும் அள்ளித் தந்த அட்சய பாத்திரம் மாட்சிமை பொருந்திய தமிழ்நாட்டின் முதலமைச்சர், உழவர்களின் திருமகன் ஐயா எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெரம்பலூர் மாவட்டத்தின் தலைநகரில் அமைந்திருக்கிற ரோலர் ஸ்கேட்டிங் மைதானம் என்பது, தமிழகத்தின் இரண்டாவது மிகப் பெரிய ரோலர் ஸ்கேட்டிங் மைதானம் ஆகும். அங்கிருக்கின்ற மாணவர்கள்,*

இளைஞர்கள் தேசிய அளவிலே பல்வேறு போட்டிகளிலே பங்குபெற்று, பல்வேறு பதக்கங்களைப் பெற்று வந்து பெருமை சேர்த்திருக்கிறார்கள். ஆகையால், மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள் அந்த ரோலர் ஸ்கேட்டிங் விளையாட்டு மைதானத்தில் செயற்கை இழை ஓடுதளம் அமைப்பதற்கு ஆவன செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என் நன்றியினைச் சொல்லி, அதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

முற்பகல் 11-10

திரு. ரா. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர்களின், மாணவர்களின் நலனுக்காக அல்லும் பகலும் அளப்பரிய திட்டங்களை அள்ளித் தருகிற மாண்புமிகு ஐயா எடப்பாடியார் அவர்களுடைய பொற்கால ஆட்சியில், பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள இளைஞர்கள், மாணவர்கள் விளையாட்டில் சிறந்து விளங்க, செயற்கை இழை ஓடுதளம் அமைக்க பரிசீலிக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு, அந்த மாவட்ட இளைஞர்களின் சார்பில் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் ஆண்டுதோறும் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றில் கபடி என்பது நமது பாரம்பரிய விளையாட்டுப் போட்டி; அது கடந்த ஆண்டு கரூரில்

2019 ஜனவரி 4]

நடத்தப்பட்டது. அதற்கு முந்தைய ஆண்டு நடத்தப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். பாரம்பரிய கபடி விளையாட்டினை ஊக்குவித்ததன் விளைவாக, பட்டி தொட்டிகளிலெல்லாம் இன்றைக்கு அந்த விளையாட்டு புகழ்பெற்று வருகிறது. நீங்கள் தொலைக்காட்சிகளில் Pro Kabaddi *பார்த்திருப்பீர்கள். அந்த அளவிற்கு இன்றைக்கு வளர்ந்து வரக்கூடிய விளையாட்டு கபடி. அந்த விளையாட்டு, வீரர்களை ஊக்குவிக்கும்வண்ணம் ஆண்டுதோறும் போட்டிகளை நடத்த வேண்டும். ஓராண்டு விட்டு, ஓராண்டு நடத்தக் கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான கபடி போட்டி கடந்த ஆண்டு நடத்தப்பட்டது. அதற்கு முந்தைய ஆண்டு நடத்தப்படவில்லை. இந்த ஆண்டு அதை நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கபடி என்பது பாரம்பரிய விளையாட்டு என்றும்,* CM Trophy-*க்கான போட்டி கடந்த வருடம் நடத்தப்பட்டது என்றும் குறிப்பிட்டார். அந்தப் போட்டி இந்த வருடமும் நடத்தப்படும். அதில் ஒன்றும் சந்தேகம் இல்லை. ஏனென்றால், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இதுபோன்ற ஒரு* scheme *இல்லை. இது மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த* scheme-*ன்* prize money-*யைப் பொறுத்தவரையில்,* CM Trophy-*க்கு மட்டுமல்ல;* School Game Federation-*ல்கூட ஒரு* individual player-*க்கு 2 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையாக வழங்கப்படுகிறது.* CM Trophy-*க்கான போட்டியில்* Individual players-*க்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாமிடங்களுக்கு முறையே 1 இலட்சம் ரூபாய், 75 ஆயிரம் ரூபாய், 50 ஆயிரம் ரூபாய் என பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.* School Game Federation-*ல் ஒரு* Individual player-*க்கு முதல் பரிசு 2 இலட்சம் ரூபாய், இரண்டாம் பரிசு 1.5 இலட்சம் ரூபாய் மற்றும் மூன்றாம் பரிசு 1 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது.*

அதேபோல, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு village games-*க்காக 25 கோடி ரூபாய் ஒதுக்கி, 12,524* village panchayats-*ம்*

விளையாட்டுப் போட்டிகளை நடத்திக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பாரம்பரிய விளையாட்டான கபடி குறித்து எழுப்பிய வினாவிற்கு முக்கியத்துவம் கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, மேலும் நல்ல முறையில் முன்னேற்றுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் பெற்ற மாநிலங்களில், நமது தமிழகம் இந்தியாவிலேயே 8-வது இடத்தில் இருந்தது. தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆசியோடு தமிழகம் இன்றைக்கு மூன்றாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், முதலிடத்திற்கு வருவதற்கு இந்த அரசு அனைத்து விதங்களிலும் நடவடிக்கைகள் எடுத்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் - விடைகள் நேரம் முடிவுற்றது

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) நான்தான் சிறப்புக் கவன ஈர்ப்பாக இன்றைக்கு எடுத்துக்கொள்ள இருக்கிறேனே? (குறுக்கீடு) வேறு பிரச்சினையா?

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, திருப்பூர், ஈரோடு, கரூர், திண்டுக்கல், நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் திருச்சி ஆகிய 13 மாவட்டங்களில் விளைநிலங்கள் வழியாக உயரழுத்த மின்கோபுரம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதையும் இன்றைக்குச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். கஜா புயல் பாதிப்பு குறித்து எடுத்துக்கொண்ட பிறகு, அதை எடுத்துக்கொள்கிறேன்.